Q.C-097

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Labour and Factories Department Test - Part – B (With Books) | 170 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.
2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.
3. In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.
4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.
5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Who is to decide the Protected Workmen under the Industrial Disputes Act?
தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்கள் என முடிவு செய்வது யார்?

(A) Trade Union
தொழிற்சங்கம்

(B) Workmen
தொழிலாளர்கள்

(C) The Management
நிர்வாகம்

(D) Conciliation Officer
சமரச அலுவலர்

2. What is the difference between the settlements under Section 18(1) and 12 (3) of the Industrial Disputes Act?
தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் 18(1) மற்றும் 12(3) ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்களில் உள்ள வேறுபாடுகள் என்ன?

(A) 18(1) Settlement is a Bipartite Settlement between the management and the party and 12(3) Settlement is a Tripartite Settlement between the Trade Union / workmen management and Conciliation Officer
18(1) ஒப்பந்தம் நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட நபர் ஆகியவர்களுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் மற்றும் 12(3) ஒப்பந்தம் தொழிற்சங்கம் /தொழிலாளர்கள், நிர்வாகம் மற்றும் சமரச அலுவலர் ஆகியோருக்கு இடையில் ஏற்படும் முத்தரப்பு ஒப்பந்தம்

(B) 18(1) Settlement is binding to all the parties
18(1) ஒப்பந்தம் எல்லா நபர்களையும் கட்டுப்படுத்தும்

(C) 12(3) Settlement is binding between the parties concerned
12(3) ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட நபர்களை கட்டுப்படுத்தும்

(D) 18(1) and 12(3) settlements are not different in nature
18(1) மற்றும் 12(3) ஒப்பந்தங்கள் வெவ்வேறான தன்மையில் இல்லை

3. Whether the individual workers can raise dispute for sanction of his annual increment before the Conciliation Officer under the Industrial Disputes Act?
தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் தனிப்பட்ட தொழிலாளர் அவரது ஆண்டு ஊதிய உயர்வு கோரிக்கைக்காக சமரச அலுவலர் முன்னிலையில் தாவா எழுப்ப இயலுமா

(A) Yes
ஆம்

(B) No
இல்லை

(C) Through the management
நிர்வாகம் மூலமாக

(D) None of the above
இவைகளில் ஒன்றுமில்லை

4. Section 254 of the Industrial Disputes Act, deals with
தொழிற்தகராறு சட்டப்பிரிவு 254 குறிப்பிடுவது

(A) Lay – off
தற்காலிக வேலை நிறுத்தி வைப்பு

(B) Strike
வேலை நிறுத்தம்

(C) Re – employment of refrenched workmen
ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கான மறு வேலை வாய்ப்பு

(D) Lock out
கதவடைப்பு

5. Under what section of the Industrial Disputes Act the term "worker" is defined
தொழிற்தகராறு சட்டத்தில் எந்த பிரிவு "தொழிலாளர்" என்பதை குறிப்பிடுகிறது

(A) Section 3(A)
பிரிவு 3(A)

(B) Section 8(D)
பிரிவு 8(D)

(C) Section 2(s)
பிரிவு 2(s)

(D) Section 9(C)
பிரிவு 9(C)

6. Who is included in Arbitrator under the Industrial Disputes Act?
தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் ஆர்பிட்ரேடர் என்பவர் கீழ் உள்ளவரில் யார் அடங்குவர்?

(A) Mediator
மத்தியஸ்தர்

(B) Agent
முகவர்

(C) Umpire
நடுவர்

(D) Contractor
ஒப்பந்ததாரர்

7. Which provision under the Industrial Disputes Act defines the term "Lockout"?
தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் "கதவடைப்பு" குறிப்பிடும் சட்டப்பிரிவு

(A) Section 2(a)
பிரிவு 2(a)

(B) Section 2(l)
பிரிவு 2(l)

(C) Section 2(k)
பிரிவு 2(k)

(D) Section 2(g)
பிரிவு 2(g)

8. Whether the Presiding Officer of the Labour Court can continue without any age bar under the Industrial Disputes Act?
தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் தொழிலாளர் நீதிமன்ற தலைமை அலுவலர் வயது தடை இன்றி பணியில் தொடர முடியுமா?

(A) No
இல்லை

(B) Yes
ஆம்

(C) As per his willingness
அவருடைய விருப்பப்படி

(D) Discretion of the Bar Council
பார் கவுன்சில் விருப்பப்படி

9. Which Schedule prescribes conditions of service of the workers under the Industrial Disputes Act?
தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் எந்த அட்டவணை தொழிலாளர்களின் பணி நிபந்தனைகளைப் பற்றி தெரிவித்துள்ளது?

(A) Ninth Schedule
ஒன்பதாவது அட்டவணை

(B) First Schedule
முதலாவது அட்டவணை

(C) Fourth Schedule
நான்காவது அட்டவணை

(D) Second Schedule
இரண்டாவது அட்டவணை

10. Which Section in the Industrial Disputes Act deals with recovery of money due from an employer?
தொழிலாளிக்கு சேர வேண்டிய தொகையினை தொழிற்தகராறுகள் சட்டத்தின் கீழ்க்கண்ட எந்தப் பிரிவின்படி வசூலித்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது?

(A) 33
(B) 33 A
(C) 33 B
(D) 33 C

11. What is the penal provision for use of False Certificate of Fitness under Motor Transport Workers Act?
மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டத்தின் கீழ் தவறான தகுதிசான்று பயன்பாட்டில் தண்டனைக்குரிய சட்டப்பிரிவு என்ன?

(A) Section 29
பிரிவு 29

(B) Section 30
பிரிவு 30

(C) Section 33
பிரிவு 33

(D) Section 29 (2)
பிரிவு 29 (2)

12. The compounding provision under the Motor Transport Workers Act prescribed in
மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டத்தில் இணக்கக் கட்டணத்திற்கான சட்டப்பிரிவு

(A) Section 32
பிரிவு 32

(B) Section 32A
பிரிவு 32A

(C) Section 33
பிரிவு 33

(D) Section 35
பிரிவு 35

13. What is the valid time for renewal of licence under Motor Transport Workers Act?
மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டத்தின் கீழ் உரிமம் புதுப்பித்தலில் அனுமதிக்கப்பட்ட கால வரம்பு

(A) 1 year
ஓராண்டு

(B) 2 years
2 ஆண்டுகள்

(C) 4 years
4 ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

14. What is the limitation period for prosecution under Motor Transport Workers Act?
மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர கால வரம்பு என்ன?

(A) 6 months from the date of inspection
ஆய்வுத் தேதியிலிருந்து 6 மாதங்கள்

(B) 12 months from the date of occurrence
சம்பவத் தேதியிலிருந்து 12 மாதங்கள்

(C) 3 months from the date of inspection by the inspector
ஆய்வாளர் ஆய்வு செய்த தேதியிலிருந்து 3 மாதங்கள்

(D) 1 year from the date of offence
சம்பவத் தேதியிலிருந்து ஓராண்டு

15. The fee for Registration Certificate prescribed under the Motor Transport Workers Rules
மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் விதிகளில் பதிவு சான்றுக் கட்டணம் வரையறை செய்யப்பட்டதற்கான விதி

(A) Rule 2
விதி 2

(B) Rule 3
விதி 3

(C) Rule 5
விதி 5

(D) Rule 4
விதி 4

16. The renewal of Certificate of Registration of motor transport undertaking prescribed under Rule
மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பதிவு சான்று புதுப்பித்தல் தொடர்பான விதி

(A) Rule 7
விதி 7

(B) Rule 5
விதி 5

(C) Rule 9
விதி 9

(D) Rule 8
விதி 8

17. The registration number of the motor transport undertaking
மோட்டார் வாகன நிறுவனத்தில் பதிவு எண் குறிப்பிடப்பட வேண்டிய பகுதி

(A) On the left side of the vehicle
வாகனத்தின் இடது பக்கத்தில்

(B) On the right side of the vehicle
வாகனத்தின் வலது பக்கத்தில்

(C) At the top of the vehicle
வாகனத்தின் மேல்

(D) Between the left and right side of the vehicle
வாகனத்தின் இடது மற்றும் வலது பக்கத்தின் நடுவில்

18. The notice of hours of work under the Motor Transport Workers Act shall be in
மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டத்தின் கீழ் வேலை நேரம் பற்றிய அறிவிப்பு குறிப்பிடப்படும் படிவம்

(A) Form V
படிவம் V

(B) Form VI
படிவம் VI

(C) Form IV
படிவம் IV

(D) Form IX
படிவம் IX

19. The certificate of fitness issued under Section 23 of the Motor Transport Workers Act valid for period of
மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டப்பிரிவு 23–ன் கீழ் வழங்கப்படும் உடற்தகுதி சான்றிதழ் செல்லுபடியாகும் காலம்

(A) 6 months
6 மாதங்கள்

(B) 9 months
9 மாதங்கள்

(C) 12 months
12 மாதங்கள்

(D) 24 months
24 மாதங்கள்

20. When the Tamil Nadu Industrial Employment (Standing Orders) Rules were framed
தமிழ்நாடு தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) விதிகள் எப்பொழுது உருவாக்கப்பட்டது ?

(A) 1946
(B) 1949
(C) 1947
(D) 1950

21. Register of Standing orders shall be maintained by the certifying officer in
சான்றளிக்கும் அதிகாரியால் பராமரிக்க வேண்டிய நிலையாணை பதிவேடு

(A) Form A
படிவம் A
(B) Form AA
படிவம் AA
(C) Form B
படிவம் B
(D) Form AAA
படிவம் AAA

22. Section 14 of the Industrial Employment (Standing Orders) Act deals with
தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டப்பிரிவு 14 குறிப்பிடுவது

(A) Power to exempt
விலக்களிக்கும் அதிகாரம்
(B) Power to make rules
விதிகள் உருவாக்க அதிகாரம்
(C) Delegation of powers
அதிகாரம் பகிர்ந்தளித்தல்
(D) Certification of standing orders
நிலையாணை சான்றளித்தல்

23. As per Industrial Employment (Standing Orders) Act, which of the following is correctly matched
தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டத்தின்படி கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்துகிறது

(A) Temporary application of model standing orders — Section 12A
மாதிரி நிலையாணைக்கான தற்காலிக விண்ணப்பம் — பிரிவு 12A
(B) Certification of standing orders — Section 9
சான்றளிக்கப்பட்ட நிலையாணை — பிரிவு 9
(C) Power to exempt — Section 10
விலக்களிக்கும் அதிகாரம் — பிரிவு 10
(D) Appeal — Section 11
மேல்முறையீடு — பிரிவு 11

24. Under the Industrial Employment (Standing Orders) Act, the documents shall be in conformity with
தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டத்தின் கீழ் சான்றளிக்கப்படும் நிலையாணைகள் கீழ்க்கண்ட ஆவணங்களுடன் ஒத்திருக்க வேண்டியது

(A) Model Standing Order
மாதிரி நிலையாணை

(B) Tamil Nadu Standing Order
தமிழ்நாடு நிலையாணை

(C) Uniform Standing Order
சீரான நிலையாணை

(D) Standard Standing Order
நிலையான நிலையாணை

25. Under the Industrial Employment (Standing Order) Act, the standing orders do not apply to certain industrial establishments prescribed under
தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டத்தின் கீழ் சில தொழில் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது எனக் குறிப்பிடும் சட்டப்பிரிவு

(A) Section 13
பிரிவு13

(B) Section 13 B
பிரிவு 13 B

(C) Section 13 A
பிரிவு 13 A

(D) Section 14 A
பிரிவு 14 A

26. Section 4 of the Industrial Employment (Standing Orders) Act deals with
தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டப் பிரிவு 4 குறிப்பிடுவது

(A) Conditions for Certification of standing orders
நிலையாணை சான்றளித்தல் தொடர்பான நிபந்தனைகள்

(B) Certifying officer
சான்றளிக்கும் அதிகாரி

(C) Model standing order
மாதிரி நிலையாணை

(D) Powers of certifying officer
சான்றளிக்கும் அதிகாரியின் அதிகாரம்

27. The main object of the Industrial Employment (Standing Orders), 1946 is
தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 ன் நோக்கமானது

(A) Settlement of disputes
தொழிற்தகராறு தீர்த்தல்

(B) Conditions of employment
பணி நிபந்தனைகள் வரையறைத்தல்

(C) Make the industrial policy
தொழிற் கொள்கை உருவாக்குதல்

(D) Promote industrial investment
தொழிலக முதலீடுகளை ஊக்குவிக்க

28. The sanctioning authority for prosecution under the Industrial Employment (Standing Orders) Act, 1946
1946–ஆம் ஆண்டு தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்ய ஒப்பளிக்கும் அளிக்க அதிகாரம் பெற்ற அதிகாரி

(A) Appropriate Government
உரிய அரசு

(B) Additional Commissioner of Labour
கூடுதல் தொழிலாளர் ஆணையர்

(C) Commissioner of Labour
தொழிலாளர் ஆணையர்

(D) Joint Commissioner of Labour
தொழிலாளர் இணை ஆணையர்

29. The language in which the text of the standing orders shall be displayed in the notice board
சான்றளிக்கப்பட்ட நிலையாணைகள் அறிவிப்பு பலகையில் எந்த மொழியில் காட்டி வைக்கப்பட வேண்டும்

(A) Only English
ஆங்கிலத்தில் மட்டும்

(B) English or language understood by workers
ஆங்கிலம் அல்லது பெரும்பாலான தொழிலாளர்கள் புரிந்து கொள்ளும் மொழியில்

(C) Only language understood by workers
பெரும்பாலான தொழிலாளர்கள் புரிந்து கொள்ளும் மொழியில்

(D) English and Tamil
ஆங்கிலம் மற்றும் தமிழ்

30. As per the Tamil Nadu Shops and Establishment Act, which of the following is correctly matched
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்படி கீழ்க்கண்டவற்றில் சரியாக பொருந்தியுள்ளது எது

| | | |
|---|---|---|
| (A) | Fines<br>அபராதம் | Section 35<br>பிரிவு 35 |
| (B) | Fixation of wage period<br>ஊதியத்திற்கான கால நிர்ணயம் | Section 32<br>பிரிவு 32 |
| (C) | Ventilation<br>காற்றோட்டம் | Section 31<br>பிரிவு 31 |
| (D) | Holidays<br>விடுப்பு | Section 30<br>பிரிவு 30 |

31. As per the Tamil Nadu Shops and Establishments Act, every employer of a shop/establishment shall maintain registers and display notices in Forms
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்படி ஒவ்வோரு கடை/நிறுவன உரிமையாளரும் பதிவேடு மற்றும் அறிவிப்புகளை பராமரிக்க வேண்டிய படிவம்

(A) Form A B C D
படிவம் A B C D

(B) Form I II III IV
படிவம் I II III IV

(C) Form P Q R S
படிவம் P Q R S

(D) Form 1 2 3 4
படிவம் 1 2 3 4

32. The name board of every shop shall be in Tamil as per ———— Tamil Nadu Shops and Establishment Act and Rules.
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் மற்றும் ———— படி கடைகளில் பெயர் பலகை தமிழில் வைக்கப்பட வேண்டும்.

(A) Rule 13
விதி 13

(B) Rule 15
விதி 15

(C) Rule 14
விதி 14

(D) Rule 16
விதி 16

33. As per the Tamil Nadu Shops and Establishment Act, Penalties for offences prescribed under
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்படி குற்றங்களுக்கான அபராதம் குறிப்பிடும் அத்தியாயம்

(A) Chapter IX
அத்தியாயம் IX

(B) Chapter V
அத்தியாயம் V

(C) Chapter X
அத்தியாயம் X

(D) Chapter VII
அத்தியாயம் VII

34. Prohibition of child labour under the Tamil Nadu Shops and Establishment Act, under
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்படி குழந்தைகளை பணிக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்ட சட்டப் பிரிவு

(A) Section 17
பிரிவு 17

(B) Section 13
பிரிவு 13

(C) Section 15
பிரிவு 15

(D) Section 14
பிரிவு 14

35. The wage slip under the Tamil Nadu Shops and Establishment Act shall be given in
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்படி சம்பளச் சீட்டு வழங்க வேண்டிய படிவம்

(A) Form P
படிவம் P

(B) Form Q
படிவம் Q

(C) Form S
படிவம் S

(D) Form T
படிவம் T

36. Appeal under the Tamil Nadu Shops and Establishment Rules shall be made before
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளின் கீழ் மேல்முறையீட்டு அலுவலர்

(A) Inspector of Labour
தொழிலாளர் ஆய்வாளர்

(B) Deputy Commissioner of Labour
தொழிலாளர் துணை ஆணையர்

(C) Labour Officer
தொழிலாளர் அலுவலர்

(D) Joint Commissioner of Labour
தொழிலாளர் இணை ஆணையர்

37. Health and Safety provisions under the Tamil Nadu Shops and Establishment Act deals with
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய சட்டப் பிரிவு கையாள்வது

(A) Medical facilities
மருத்துவ வசதிகள்

(B) Cleanliness, ventilation
சுகாதாரம், காற்றோட்டம்

(C) Safety equipments
பாதுகாப்பு உபகரணங்கள்

(D) First aid facilities
முதலுதவி வசதி

38. The time limit for making an appeal under the Tamil Nadu Shops and Establishment Act is
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் மேல்முறையீடு செய்வதற்கான காலக்கெடு

(A) Within 30 days from the date of termination
பணி நீக்கம் செய்யப்பட்ட 30 நாட்களுக்குள்

(B) Within 60 days from the date of termination
பணி நீக்கம் செய்யப்பட்ட 60 நாட்களுக்குள்

(C) Within 3 months from the date of termination
பணி நீக்கம் செய்யப்பட்ட 3 மாதங்களுக்குள்

(D) Within 2 months from the date of termination
பணி நீக்கம் செய்யப்பட்ட 2 மாதங்களுக்குள்

39. The overtime of an employee under the Tamil Nadu Shops and Establishments Act shall not exceed
தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் ஒரு பணியாளர் மிகை நேரம் கீழ்க்குறிப்பிடப்பட்டவற்றிற்கு அதிகமாக இருத்தல் கூடாது

(A) 2 hours in a day and 6 hours in a week
ஒரு நாளில் 2 மணி நேரம் மற்றும் 1 வாரத்தில் 6 மணி நேரம்

(B) 2 hours in a day and 4 hours in a week
ஒரு நாளில் 2 மணி நேரம் மற்றும் 1 வாரத்தில் 4 மணி நேரம்

(C) 4 hours in a day and 6 hours in a week
ஒரு நாளில் 4 மணி நேரம் மற்றும் 1 வாரத்தில் 6 மணி நேரம்

(D) 4 hours in a day and 4 hours in a week
ஒரு நாளில் 4 மணி நேரம் மற்றும் 1 வாரத்தில் 4 மணி நேரம்

40. The term "establishment" under the Tamil Nadu Manual Workers (Regulation of employment and conditions of work) Act is defined under
'நிறுவனம்' என்ற பதம் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தில் வரையறை செய்யப்பட்ட சட்டப் பிரிவு

(A) Section 2 (1)
பிரிவு 2 (1)

(B) Section 2 (3)
பிரிவு 2 (3)

(C) Section 2 (6)
பிரிவு 2 (6)

(D) Section 2 (5)
பிரிவு 2 (5)

41. As per the Tamil Nadu Manual Workers (Regulation of Employment and Conditions of Work) Rules the term of a non official members of the board ———— from the date of notification in the official gazettee.
தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) விதிகளின் படி வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினரின் பதவிக் காலம் அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ———— காலம் வரை.

(A) 5 years
5 வருடங்கள்

(B) 3 years
3 வருடங்கள்

(C) 1 year
1 வருடம்

(D) 2 years
2 வருடங்கள்

42. What is the minimum age required to register under the Tamil Nadu Manual Workers Welfare Scheme?
தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நலத் திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு குறைந்தபட்ச வயது என்ன?

(A) 18 years
18 வருடங்கள்

(B) 15 years
15 வருடங்கள்

(C) 16 years
16 வருடங்கள்

(D) 14 years
14 வருடங்கள்

43. The Chief Executive Officer of the Tamil Nadu Manual Workers Welfare Board is
தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியத்தின் தலைமை செயல் அதிகாரி

(A) Secretary of the Board
வாரியத்தின் செயலாளர்

(B) Secretary to Government
அரசு செயலாளர்

(C) Chairman of the Board
வாரியத்தின் தலைவர்

(D) Hon'ble Minister for Labour
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்

44. The term "employer" under the Tamil Nadu Manual Workers (Regulation of Employment And Conditions of Work) Act is defined under
'வேலையளிப்பவர்' என்ற பதம் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தில் வரையறை செய்யப்பட்ட சட்டப் பிரிவு

(A) Section 2 (1)
பிரிவு 2 (1)

(B) Section 2 (3)
பிரிவு 2 (3)

(C) Section 2 (2)
பிரிவு 2 (2)

(D) Section 2 (5)
பிரிவு 2 (5)

45. The accident compensation given to the dependants of the construction worker who died at work place
பணியிடத்தில் விபத்தில் மரணம் அடையும் கட்டுமானத் தொழிலாளரின் சார்ந்தோருக்கு வழங்கப்படும் விபத்து மரணத் தொகை

(A) 5 lakhs
5 இலட்சம்

(B) 2 lakhs
2 இலட்சம்

(C) 1 lakh
1 இலட்சம்

(D) 3 lakhs
3 இலட்சம்

46. The registration of a manual worker is valid for a period of
உடலுழைப்புத் தொழிலாளியின் பதிவு செல்லுபடியாகும் காலம்

(A) 1 year
1 வருடம்

(B) 3 years
3 வருடங்கள்

(C) 2 years
2 வருடங்கள்

(D) 5 years
5 வருடங்கள்

47. The Payment of Gratuity Act was enacted in the year
பணிக்கொடைபட்டுவாடாச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(A) 1972

(B) 1970

(C) 1973

(D) 1971

48. Which section deals with the determination of the amount of gratuity under the Payment of Gratuity Act?
பணிக்கொடை வழங்கும் சட்டத்தின் கீழ் பணிக்கொடை நிர்ணயம் செய்தல் தொடர்பான சட்டப் பிரிவு

(A) Section 7
பிரிவு 7

(B) Section 6
பிரிவு 6

(C) Section 8
பிரிவு 8

(D) Section 9
பிரிவு 9

49. Under the Payment of Gratuity Act, the rate of gratuity is ———— salary for every completed years of service.
பணிக்கொடை வழங்கும் சட்டத்தின் கீழ் பணி முடித்த ஒவ்வொரு ஆண்டிற்கு ———— ஊதியம் என்ற அடிப்படையில் பணிக்கொடை கணக்கீடு செய்யப்படுகிறது.

(A) 15 days
15 நாட்கள்

(B) 45 days
45 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 60 days
60 நாட்கள்

50. In order to be eligible for payment of gratuity, an employee shall have a minimum continuous service of
பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் கீழ் பணிக்கொடை பெறுவதற்கு ஒரு பணியாளர் முடிக்க வேண்டிய தகுதியான பணிக் காலம் என்பது

(A) 1 year
1 வருடம்

(B) 3 years
3 வருடங்கள்

(C) 2 years
2 வருடங்கள்

(D) 5 years
5 வருடங்கள்

51. Which of the following not included in wages under the Payment of Gratuity Act?
பணிக்கொடை வழங்கல் சட்டத்தில் 'சம்பளம்' என்ற இனத்தின் கீழ் வராதவை

(A) All emoluments which are earned by an employee while on duty
பணியாளர் பணியின் போது ஈட்டிய அனைத்து ஊதியங்களும்

(B) Dearness Allowance
அகவிலைப்படி

(C) All emoluments which are earned by an employee while on leave
பணியாளர் விடுப்பின் போது ஈட்டிய அனைத்து ஊதியங்களும்

(D) Overtime Wages
மிகை நேர ஊதியம்

52. Gratuity of an employee may be forfeited whose service have been terminated for
பணி நீக்கம் செய்யப்பட்ட ஒரு பணியாளரின் பணிக்கொடை பிடித்தம் செய்யலாம்

(A) Willful omission causing any damage or loss to property of employee
வேண்டுமென்றே வேலையளிப்பவரின் சொத்திற்கு இழப்பு அல்லது நஷ்டம் ஏற்படுத்துதல்

(B) Resignation
இராஜினாமா

(C) Death
இறப்பு

(D) retirement
பணி ஓய்வு

53. A person who is eligible for payment of gratuity shall send written application to the employer within ———————— days from the date the gratuity becomes payable.
பணிக்கொடை பெற தகுதியான நபர், பணிக்கொடை வழங்க வேண்டிய தேதியிலிருந்து ———————— நாட்களுக்குள் வேலையளிப்பவருக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

(A) 15 days
15 நாட்கள்

(B) 45 days
45 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 60 days
60 நாட்கள்

54. The maximum gratuity payable under the Payment of Gratuity Act is
பணிக்கொடை வழங்கல் சட்டத்தின்படி அதிகப்பட்ச பணிக்கொடைத் தொகை

(A) 20 lakhs
20 இலட்சம்

(B) 5 lakhs
5 இலட்சம்

(C) 10 lakhs
10 இலட்சம்

(D) 15 lakhs
15 இலட்சம்

55. In case of seasonal employee, the employer shall pay the gratuity at the rate of ———————— days' wages for each season.
பருவ கால நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, ஒவ்வொரு பருவ காலத்திற்கும் ———————— நாட்களுக்கு கூலியைக் கணக்கிட்டு வேலையளிப்பவரால் பணிக்கொடை வழங்கப்படும்.

(A) 15 days
15 நாட்கள்

(B) 10 days
10 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 7 days
7 நாட்கள்

56. Appeal on the decision of controlling authority under the Payment of Gratuity Act shall be preferred before
பணிக்கொடை வழங்கல் சட்டத்தின்படி கட்டுப்பாட்டு அதிகாரி பிறப்பித்த உத்தரவின் மீது மேல்முறையீடு செய்யப்பட வேண்டிய அலுவலர்

(A) Additional Commissioner of Labour
கூடுதல் தொழிலாளர் ஆணையர்

(B) Deputy Commissioner of Labour
தொழிலாளர் துணை ஆணையர்

(C) Commissioner of Labour
தொழிலாளர் ஆணையர்

(D) Joint Commissioner of Labour
தொழிலாளர் இணை ஆணையர்

57. Who is the competent authority to cancel the registration of Trade Union?
தொழிற்சங்க பதிவை இரத்து செய்ய தகுதிவாய்ந்த அதிகாரி

(A) Assistant Commissioner of Labour
தொழிலாளர் உதவி ஆணையர்

(B) Registrar of Trade Union
தொழிற்சங்க பதிவாளர்

(C) Deputy Commissioner of Labour
தொழிலாளர் துணை ஆணையர்

(D) Commissioner of Labour
தொழிலாளர் ஆணையர்

58. Under Industrial Disputes Act, the term award is defined in
தொழிற்தகராறுகள் சட்டத்தின் கீழ் "தீர்வம்" என்ற பதம் வரையறுக்கப்பட்டுள்ள சட்ட பிரிவு

(A) Section 2 (t)
பிரிவு 2 (t)

(B) Section 2 (b)
பிரிவு 2 (b)

(C) Section 2 (p)
பிரிவு 2 (p)

(D) Section 2 (q)
பிரிவு 2 (q)

59. As per the Trade Union Act, which of the following is correctly matched?
தொழிற்சங்க சட்டத்தின்படி எவை சரியாக பொருத்தப்பட்டுள்ளது?

(A) Certification of Registration — Section 9A
பதிவு சான்று — பிரிவு 9A

(B) Right to inspect books of trade union — Section 22
தொழிற்சங்கத்தின் பதிவேடுகளை ஆய்வு செய்யும் உரிமை — பிரிவு 22

(C) Dissolution — Section 28
கலைப்பு — பிரிவு 28

(D Failure to submit returns — Section 31
ஆண்டறிக்கை சமர்ப்பிக்கத் தவறியது — பிரிவு 31

60. Who is the competent authority to register a Trade Union?
தொழிற்சங்கம் பதிவு செய்ய தகுதிவாய்ந்த அதிகாரி?

(A) Assistant commissioner of Labour
தொழிலாளர் உதவி ஆணையர்

(B) Registrar of Trade Union
தொழிற்சங்க பதிவாளர்

(C) Deputy commissioner of Labour
தொழிலாளர் துணை ஆணையர்

(D) Commissioner of Labour
தொழிலாளர் ஆணையர்

61. Every trade union shall submit annual return on or before
ஒவ்வொரு தொழிற்சங்கமும் ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய நாள்

(A) 31st December every year
ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ம் தேதிக்குள்

(B) 30th April every year
ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 30 ம் தேதிக்குள்

(C) 31st March every year
ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ம் தேதிக்குள்

(D) 30th June every year
ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 30 ம் தேதிக்குள்

62. What is the maximum percentage of bonus under the Payment of Bonus Act?
போனஸ் பட்டுவாடா சட்டத்தின்படி அதிகபட்ச போனஸ் சதவீதம் எவ்வளவு?

(A) 20%
(B) 10%
(C) 8.33%
(D) 18.33%

63. Salary or wage under the Payment of Bonus includes
போனஸ் பட்டுவாடா சட்டத்தில் சம்பளம் அல்லது கூலியில் உள்ளடக்கியது

(A) Bonus
போனஸ்

(B) Travelling Expenses
போக்குவரத்துப்படி

(C) Dearness Allowance
அகவிலைப்படி

(D) Commission
கமிஷன் தொகை

64. Payment of Bonus is applicable to
போனஸ் பட்டுவாடா சட்டம் பொருந்துவது

(A) Factory
தொழிற்சாலை

(B) Life Insurance Corporation of India
இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்

(C) Reserve Bank of India
இந்திய ரிசர்வ் வங்கி

(D) Unit Trust of India
யுனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா

65. In the Payment of Bonus Act, ——————— deals with the computation of number of working days
போனஸ் பட்டுவாடா சட்டத்தின்படி ——————— பிரிவு வேலைநாட்களின் கணக்கீடு பற்றியது

(A) Section 16
பிரிவு 16

(B) Section 14
பிரிவு 14

(C) Section 12
பிரிவு 12

(D) Section 15
பிரிவு 15

66. The employer shall not be liable to pay compensation under Employees Compensation for any injury which does not result in total or partial disablement of the employee for the period exceeding 3 days is dealt in
பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் மொத்த அல்லது பகுதி இயலாமையில் 3 நாட்களுக்கு மிகாமல் காய விபத்து நிகழ்வுக்கு உரிமையாளர் இழப்பீடு வழங்க தேவையில்லை என்பதை குறிப்பிடும் சட்டப்பிரிவு

(A) Section 3(b)
பிரிவு 13 (b)

(B) Section 3 (a)
பிரிவு 3 (a)

(C) Section 4
பிரிவு 4

(D) Section 4 (a)
பிரிவு 4 (a)

67. When the employee is under influence of drink or drug during accident whether he is entitled for compensation under the Employees Compensation Act prescribed in
பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் பணியாளர் விபத்து நிகழ்வில் மது மற்றும் போதையில் இருக்கும்போது அவர் இழப்பீட்டுத் தொகைக்கு தகுதிபெறுகிறாரா என்பதை குறிப்பிடும் சட்டப்பிரிவு

(A) Section 3 (b) (iii)
பிரிவு 3 (b) (iii)

(B) Section 3 (b) (i)
பிரிவு 3 (b) (i)

(C) Section 4 (b)
பிரிவு 4 (b)

(D) Section 4 (a)
பிரிவு 4 (a)

68. Who is the appellate authority against the orders of the Commissioner for Compensation under the Employees Compensation Act
பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் இழப்பீடு ஆணையர் பிறப்பித்த உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டியது யாரிடம்

(A) Additional Labour Commissioner
கூடுதல் தொழிலாளர் ஆணையர்

(B) Commissioner of Labour
தொழிலாளர் ஆணையர்

(C) High Court
உயர் நீதிமன்றம்

(D) Labour Court
தொழிலாளர் நீதிமன்றம்

69. Employees compensation Act enacted in the year
பணியாளர் இழப்பீடு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(A) 1924
(B) 1926
(C) 1923
(D) 1925

70. Employer's Liability for compensation under the Employees compensation act is prescribed in section
பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் வேலையளிப்பவரின் இழப்பீடு தொகை வழங்கவேண்டிய கடமையினை குறிப்பிடும் சட்டப்பிரிவு

(A) Section 10
பிரிவு 10
(B) Section 3
பிரிவு 3
(C) Section 15
பிரிவு 15
(D) Section 15 A
பிரிவு 15 A

71. Powers and Procedures of Commissioner under the Employees Compensation Act, are laid down in
பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் ஆணையரின் அதிகாரம் மற்றும் நடைமுறை குறித்த சட்டப் பிரிவு

(A) Section 21
பிரிவு 21
(B) Section 24
பிரிவு 24
(C) Section 23
பிரிவு 23
(D) Section 25
பிரிவு 25

72. Application for compensation under the Employees Compensation Act, shall be filed in
பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் இழப்பீடு பெறுவதற்கான விண்ணப்பம் பூர்த்தி செய்ய வேண்டிய படிவம்

(A) Form C
படிவம் C
(B) Form D
படிவம் D
(C) Form F
படிவம் F
(D) Form G
படிவம் G

73. The Age Factor for calculating the compensation under the Employees Compensation Act prescribed in
பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் இழப்பீடு கணக்கீடுவதற்கு வயதிற்கான காரணிகள் இடம் பெற்றுள்ள அட்டவணையாவது

(A) Schedule I
அட்டவணை I

(B) Schedule II
அட்டவணை II

(C) Schedule III
அட்டவணை III

(D) Schedule IV
அட்டவணை IV

74. Medical expenses of an injured employee can be reimbursed under the Employees Compensation Act, as per
பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் படி காயமுற்ற பணியாளர் மருத்துவ செலவினை திரும்ப பெறுவது குறித்த சட்டப் பிரிவு

(A) Section 4 (1)
பிரிவு 4 (1)

(B) Section 4 (2A)
பிரிவு 4 (2A)

(C) Section 4 (2)
பிரிவு 4 (2)

(D) Section 5
பிரிவு 5

75. The list of injuries under the Employees Compensation Act prescribed in
பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் காயங்களின் பட்டியல் குறிப்பிட்டுள்ள அட்டவணை

(A) Schedule I
அட்டவணை I

(B) Schedule II
அட்டவணை II

(C) Schedule III
அட்டவணை III

(D) Schedule IV
அட்டவணை IV

76. The funeral expenses under the Employees Compensation Act is
பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் ஈமசடங்கு உதவித் தொகை

(A) Rs.2500/-
ரூ.2500/-

(B) Rs.5000/-
ரூ.5000/-

(C) Rs.7500/-
ரூ.7500/-

(D) Rs.5500/-
ரூ.5500/-

77. The list of injuries deemed to result in "Permanent Partial Disablement" under the Employees Compensation Act prescribed in
பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் "பகுதி நிரந்தர ஊனம்" குறிப்பிட்டுள்ள அட்டவணை

(A) Schedule I Part I
அட்டவணை I பகுதி I

(B) Schedule II
அட்டவணை II

(C) Schedule I Part II
அட்டவணை I பகுதி II

(D) Schedule III
அட்டவணை III

78. What is the limit of employees for maintaining the canteen in Beedi and Cigar establishments?
பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் சட்டத்தின் கீழ் நிறுவனத்தில் உணவகம் அமைப்பதில் தொழிலாளர்களின் எண்ணிக்கை வரம்பு எவ்வளவு?

(A) Less than 150 Employees
150 தொழிலாளர்களுக்கும் கீழ்

(B) Not less than 100 Employees
100 தொழிலாளர்களுக்கும் குறைவில்லாமல்

(C) Less than 200 Employees
200 தொழிலாளர்களுக்கும் கீழ்

(D) Not less than 250 Employees
250 தொழிலாளர்களுக்கும் குறைவில்லாமல்

79. What is the period of rest for the employee in Beedi and Cigar Workers Act?
பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு இடைவெளி நேரம் என்ன?

(A) 1 Hour
1 மணி நேரம்

(B) 60 Minutes
60 நிமிடங்கள்

(C) 30 Minutes
30 நிமிடங்கள்

(D) At least Half an Hour
குறைந்த அளவு அரை மணி நேரம்

80. The spread over to the employee in any day under the Beedi and Cigar Workers Act
பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு எந்த நாளிலும் மொத்த பரவல் நேரம்

(A) Not more than 6 Hours
6 மணி நேரத்திற்கு மிகாமல்

(B) Not more than 10 Hours
10 மணி நேரத்திற்கு மிகாமல்

(C) Not more than 10 ½ hours
10.30 மணி நேரத்திற்கு மிகாமல்

(D) Not more than 8 Hours
8 மணி நேரத்திற்கு மிகாமல்

81. Whether Home Worker is covered as "Worker" under the Beedi and Cigar Workers Act
பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் சட்டத்தின் கீழ் "வீட்டு வேலையாள்" தொழிலாளி என உட்படுத்தப்படுவாரா

(A) Not Covered
உட்படாதவர்

(B) Covered
உட்படுவார்

(C) Not eligible
தகுதியின்மை

(D) Not included
சேராதவர்

82. The employment of child is prohibited under the Beedi and Cigar Worker Act in
பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் சட்டத்தின் கீழ் குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தப்படுதல் தடை செய்யப்படும் சட்டப்பிரிவு

(A) Section 23
பிரிவு 23

(B) Section 25
பிரிவு 25

(C) Section 24
பிரிவு 24

(D) Section 33
பிரிவு 33

83. The Packages shall contain certain declarations as per the Packaged commodities rules
பொட்டலப் பொருட்கள் விதிகளின்படி பொட்டலங்களில் குறிப்பிட்டிருக்க வேண்டிய விவரங்கள் குறித்த விதி

(A) Rule 3
விதி 3

(B) Rule 2
விதி 2

(C) Rule 6
விதி 6

(D) Rule 5
விதி 5

84. Whether month and year of packing shall be mentioned in the package of incense sticks
ஊதுபத்திகள் அடங்கிய பொட்டலங்களில் பேக்கிங் செய்த மாதம் மற்றும் ஆண்டு குறிப்பிடப்படவேண்டுமா

(A) Necessary
அவசியம்

(B) Not Necessary
அவசியமில்லை

(C) Partly to be made
பகுதி விவரம் பராமரித்தல்

(D) Willingness of the Packer
பேக்கரின் விருப்பத்தை பொறுத்தது

85. In the Legal Metrology (PC) Rules, 2011, "industrial consumer" is defined in
சட்டமுறை எடையளவுகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011 ன் படி 'தொழிலக நுகர்வோர்' என்ற பதம் கீழ்க்கண்ட பிரிவின் கீழ் வரையறை செய்யப்படுகிறது

(A) Section 2 (b)
பிரிவு 2 (b)

(B) Section 2 (bb)
பிரிவு 2 (bb)

(C) Section 2 (d)
பிரிவு 2 (d)

(D) Section (bc)
பிரிவு 2 (bc)

86. As per the Legal Metrology (Enforcement) Rules, 2011 Working Standards shall be kept with
2011 ம் ஆண்டு சட்டமுறை எடையளவு (அமுலாக்க) விதிகளின் கீழ் செயல்முறை தராசுகள் இந்த அதிகாரியிடம் வைக்கப்பட்டிருக்கும்

(A) Legal Metrology Officer
சட்டமுறை எடையளவு அலுவலர்

(B) Commissioner of Labour
தொழிலாளர் ஆணையர்

(C) Deputy Commissioner of Labour
தொழிலாளர் துணை ஆணையர்

(D) Assistant Commissioner of Labour
தொழிலாளர் உதவி ஆணையர்

87. What is the penalty if a person charges more than MRP printed in the packaged commodities?
ஒரு நபர் பொட்டலப் பொருட்களில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச சில்லறை விலைக்கும் அதிகமான விலைக்கு விற்பனை செய்தால் அவருக்கு விதிக்கப்படும் அபராதம் எவ்வளவு

(A) He shall be punished with fine which may extend to Rs. 500/-
ரூ.500/-வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்

(B) He shall be punished with fine which may extend to Rs. 1000/
ரூ.1000/-வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்

(C) He shall be punished with fine which may extend to Rs. 2000/
ரூ.2000/-வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்

(D) He shall be punished with fine which may extend to Rs. 5000/-
ரூ.5000/-வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்

88. Which Act provides the welfare of labour and to regulate the conditions of work in any plantations?
எந்த சட்டம் தோட்ட தொழிலாளர்களுக்கான நலன் மற்றும் அவர்களது பணி நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துகிறது

(A) Industrial Dispute Act
தொழிற் தகராறு சட்டம்

(B) Factories Act
தொழிற்சாலைகள் சட்டம்

(C) Tea Act
தேயிலை சட்டம்

(D) Plantations Labour Act
தோட்டத் தொழிலாளர் சட்டம்

89. What is the period of spread over for plantation workers
தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் பரவுதல் காலம்

(A) 8 hours
8 மணி நேரம்

(B) 10 hours
10 மணி நேரம்

(C) 9 hours
9 மணி நேரம்

(D) 12 hours
12 மணி நேரம்

90. Plantation Labour Act applies to plantation having
தோட்டத் தொழிலாளர் சட்டம் நடைமுறைப்படுத்த இருக்க வேண்டிய பரப்பளவு

(A) 3 hectares or more
3 ஹெக்டேர் அல்லது அதற்கு மேல்

(B) 5 hectares or more
5 ஹெக்டேர் அல்லது அதற்கு மேல்

(C) 2 hectares of more
2 ஹெக்டேர் அல்லது அதற்கு மேல்

(D) 15 hectares or more
15 ஹெக்டேர் அல்லது அதற்கு மேல்

91. Which of the following will not come under the definition of the term "plantation" under the Plantations Labour Act?
தோட்டத் தொழிலாளர் சட்டப்படி 'மலைத்தோட்டம்' என்ற வரையறையில் வராதது

(A) Factory in the Plantation
தோட்ட நிறுவனத்தில் உள்ள தொழிற்சாலை

(B) Dispensaries in the Plantations
தோட்ட நிறுவனத்தில் உள்ள மருந்தகம்

(C) Hospitals in the Plantations
தோட்ட நிறுவனத்தில் உள்ள மருத்துவமனை

(D) Schools in Plantations
தோட்ட நிறுவனத்தில் உள்ள பள்ளிக்கூடம்

92. Cognizance of offence under Plantations Labour Act shall be made within ———————— months from the date of offence

தோட்டத் தொழிலாளர் சட்டப்படி குற்றமுறையீடு செய்ய, குற்றம்புரியப்பட்ட ———————— மாதங்களுக்குள் தாக்கல் செய்யப்படவேண்டும்

(A) Twelve
பன்னிரெண்டு

(B) Two
இரண்டு

(C) Three
மூன்று

(D) Four
நான்கு

93. Section 12 of the Tamil Nadu Catering Establishment Act deals with
தமிழ்நாடு உணவு நிறுவன சட்டப்பிரிவு 12 குறிப்பிடுவது

(A) Leave with wages
சம்பளத்துடன் கூடிய விடுப்பு

(B) Interval for rest
ஓய்வு இடைவேளை

(C) Holiday
விடுமுறை

(D) Appeal
மேல்முறையீடு

94. The register of Catering Establishment shall be maintained in
உணவு நிறுவனங்கள் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டிய படிவம்

(A) Form I
படிவம் I

(B) Form III
படிவம் III

(C) Form II
படிவம் II

(D) form IV
படிவம் IV

95. Every employee shall be issued wage slip to a worker in catering establishment in
ஒவ்வொரு உணவு நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளிக்கு சம்பள சீட்டு வழங்கப்பட வேண்டிய படிவம்

(A) Form XV
படிவம் XV

(B) Form XVI
படிவம் XVI

(C) Form XVII
படிவம் XVII

(D) Form XVIII
படிவம் XVIII

96. The period of limitation for taking cognizance of offence under the Tamil Nadu Catering Establishment Act, is
தமிழ்நாடு உணவு நிறுவன சட்டத்தின் கீழ் குற்ற முறையீட்டை ஏற்பதற்கான காலவரையறை

(A) One month
ஒரு மாதம்

(B) Six months
ஆறு மாதங்கள்

(C) Three months
மூன்று மாதங்கள்

(D) Two months
இரண்டு மாதங்கள்

97. Under the Tamil Nadu Catering Establishment Act, Certificate of fitness shall be maintained in
தமிழ்நாடு உணவு நிறுவன சட்டத்தின் கீழ் உடற்தகுதி சான்றிதழ் பராமரிக்கப்பட வேண்டிய படிவம்

(A) Form II
படிவம் II

(B) Form V
படிவம் V

(C) Form III
படிவம் III

(D) Form I
படிவம் I

98. Section 14 of the Employees Compensation Act, deals with
பணியாளர் இழப்பீடு சட்ட பிரிவு 14 குறிப்பிடுவது

(A) Insolvency of the Employer
வேலையளிப்பவர் நொடிப்பு

(B) Penalties
தண்டணைகள்

(C) Contracting out
ஒப்பந்தம்

(D) Medical Examination
மருத்துவ பரிசோதனை

99. The maximum spread over period of work in a catering establishment in one day is
ஒரு உணவு நிறுவனத்தில் தொழிலாளி ஒருநாளில் அதிகபட்ச பணியில் இருக்க அனுமதிக்கப்பட்டபரவல் நேரம்

(A) 8 hours
8 மணி நேரம்

(B) 10 hours
10 மணி நேரம்

(C) 12 hours
12 மணி நேரம்

(D) 14 hours
14 மணி நேரம்

100. An employee working in a Catering Establishment is entitled to overtime wages if he works more than
ஒரு உணவு நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர் மிகை நேர பணிக்கூலி பெற பணிபுரிய வேண்டிய நேரம்

(A) 8 hours in a day, 48 hours in a week
ஒரு நாளில் 8 மணி நேரம், வாரத்தில் 48 மணி நேரம்

(B) 8 hours in a day, 54 hours in a week
ஒரு நாளில் 8 மணி நேரம், வாரத்தில் 54 மணி நேரம்

(C) 9 hours in a day, 48 hours in a week
ஒரு நாளில் 9 மணி நேரம், வாரத்தில் 48 மணி நேரம்

(D) 9 hours in a day, 54 hours in a week
ஒரு நாளில் 9 மணி நேரம், வாரத்தில் 54 மணி நேரம்

---